# தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.02.2013 A.M**

---

## தேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்கிய அரசுக்கு பாராட்டு

நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளுக்கு ரூ.28 கோடி மானியம் வழங்கிய தமிழக அரசுக்கு பாராட்டு தெரிவித்து அதிமுக விவசாயிகள் கருத்தரங்கில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட அதிமுக விவசாயிகள் பிரிவு கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை குன்னூர் விவேக் அரங்கில் நடைபெற்றது. மாவட்ட விவசாயிகள் பிரிவுச் செயலர் தேனாடு லட்சுமணன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் கே.ஆர்.அர்ஜுனன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டார். மாநில விவசாய பிரிவு துணைப் பொதுச் செயலர் எம்.பாரதியார் முன்னிலை வகித்தார்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: கூட்டுறவுத் தேயிலை ஆலை விவசாயிகளுக்கு கிலோவுக்கு ரூ.2 மானியம் வழங்கியதற்காகவும், மேட்டுப்பாளையத்தில் தேயிலைப் பதப்படுத்துதல், தரம் பிரித்தல் ஆகியவற்றுக்காக ரூ.15 கோடி நிதி ஒதுக்கியதற்காகவும், நஞ்சநாடு தேயிலைத் தொழிற்சாலையை நிறுவ ரூ.5 கோடி நிதி ஒதுக்கியதற்காகவும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரம் கோடி நிதியை சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் உள்ளிட்டவைகளுக்காக மானியம் வழங்கியதற்காகவும், கணினிமயமாக்கப்பட்ட தேயிலை ஏல மையத்தை உலகிலேயே முதல் முறையாக உருவாக்கியதற்காகவும் பாராட்டு தெரிவிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதிமுக கழக அமைப்புச் செயலர் ஏ.கே.செல்வராஜ், அண்ணா தோட்டத் தொழிற்சங்க மாநிலச் செயலர் பி.ஜெயராம், குன்னூர் நகரச் செயலர் ஒய்.சத்தார், நகர்மன்றத் தலைவர் சி.கோபால ருஷ்ணன், துணைத் தலைவர் எல்.மணி, திட்டக் குழு உறுப்பினர் ஒய்.எஸ்.முபாரக், பர்லியாறு ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.கலைச்செல்வன், குன்னூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் சாந்தா, துணைத் தலைவர் ஹேம்சந்த், எடப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் கோபால்ராஜ், குன்னூர் நகர அவைத் தலைவர் நிர்மல் சந்த் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 37.15 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 150 கனஅடி நீர் வந்தது.

அணையிலிருந்து ஆற்றில் 86 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,000 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணை நீர் இருப்பு 2.02 டி.எம்.சி.

## வறட்சி நிவாரணம் கோரி ஆர்ப்பாட்டம்

வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கோவில்பட்டியில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கோவில்பட்டி வட்டாரக் குழு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு முன்னாள் எம்.எல்.ஏ. அய்யலுசாமி தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்டாரத் தலைவர் சேதுராமலிங்கம், செயலர் லெனின்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் மழையின்றி விளைச்சல் இல்லாமல் போனதால் மானாவாரி பகுதிகளையும் வறட்சி என அறிவித்து ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். கூட்டுறவு மற்றும் பிற வங்கிகளில் பெற்றுள்ள விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். 2008-2009 ஆண்டுக்கான பயிர்க் காப்பீட்டுத் தொகையை உடனே வழங்க வேண்டும். 2010-2011 ஆண்டுக்கான பயிர்க் காப்பீட்டு பாக்கித் தொகையை உடனே வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த அழகுமுத்துப்பாண்டியன் (கோவில்பட்டி), ராமசுப்பு (வில்லிசேரி), ராதாகிருஷ்ணன் (கழுகுமலை), சிங்கராஜ் (லிங்கம்பட்டி), பொன்னுச்சாமி (கடம்பூர்), பாபு (மந்தித்தோப்பு), மாதர் சங்க நகரச் செயலர் சரோஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## சிறுதானிய அறுவடைக்கு உமி நீக்கும் இயந்திரம்

தமிழகத்தில் 3 மாவட்ட விவசாயிகளுக்கு சிறுதானிய பொருள்களை அறுவடை செய்வதற்கான உமி நீக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார். கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், "கனடா-இந்தியா ஆராய்ச்சி உறவு நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்' குறித்த நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி பேசியது: மதிய உணவுத் திட்டத்தில் சிறுதானியங்கள் பயன்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதிகமாக சிறுதானிய பொருள்களை உற்பத்தி செய்யும் பொருட்டு, அறுவடை நேரத்தில் பயன்படுத்தப்படும் உமி நீக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. திருச்சியில் மட்டும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் மதுரை மாவட்டங்களிலும் உமி நீக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும் என்றார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

13.02.2013 A.M

## அறுவடை இயந்திர வாடகை உயர்வால்...அதிர்ச்சி!டெல்டா விவசாயிக்கு தொடரும் சோதனை

தஞ்சாவூர்: காவிரி நீர், மழை நீர் கைவிரித்ததை தொடர்ந்து, டேங்கர் லாரிகளில் தண்ணீர் இறைத்து காப்பாற்றிய நெற்பயிர்களை, வாடகை இயந்திரம் மூலம் அறுவடை செய்ய, ஏக்கருக்கு, 1,800 ரூபாய் முதல், 2,000ம் ரூபாய் வரை தஞ்சை விவசாயிகளுக்கு செலவாகிறது. இதனால் கூடுதல் செலவை தாக்குப்பிடிக்க முடியாமல், டெல்டா விவசாயிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டு குறுவை பருவத்தில் பயிரிடப்பட்ட, 45 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் முழுவதும், காவிரி நீரை நம்பி பயிரிடவில்லை. பெரும்பாலும் பம்ப்செட் மோட்டார், மின்சாரத்தை நம்பியே விவசாயிகள் பயிட்டனர். இதன்படி, பழைய டெல்டா பகுதிகளான திருப்பனந்தாள், கும்பகோணம், அம்மாபேட்டை, திருபுவனம், ஒரத்தநாடு தாலுக்கா பாதி பகுதிகளில் பெருமளவில் குறுவை நெல் பயிரிடப்பட்டது.

இதில் முழுமையாக நெல் விளைச்சல் பெருகி, அறுவடையும் நன்றாக முடிந்துவிட்டது. இதன்மூலம் சராசரியாக குறுவையில், ஏக்கருக்கு, இரண்டு டன் வீதம், 90 ஆயிரம் டன் நெல் மகசூல் ஏற்பட்டது. மேலும் வயல்களுக்கே வெளியூர் வியாபாரிகள் நேரடியாக வந்து, ஒரு மூட்டைக்கு, 900 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கி சென்றனர். இதுவே முந்தைய ஆண்டு, 800 ரூபாய் தான் கிடைத்தது. 100 ரூபாய் கூடுதலாக தற்போது கிடைத்துள்ளது. இதனால், ரகங்களை பொறுத்து, நெல் மூட்டை ஒன்றுக்கு நடப்பாண்டு சராசரியாக, 100 ரூபாய் வரை விவசாயிகள் லாபம் பெற்றனர்.

இதனைத்தொடர்ந்து, தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா, தாளடி பருவத்தில் நெல்சாகுபடியை, மூன்று லட்சம் ஏக்கரில் விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இதில், ஆற்றுப்பாசனம், கால்வாய் பாசனம் மூலமும், பம்ப்செட் மோட்டார் மூலமும் தண்ணீர் பெற்று சாகுபடி நடந்தது. தற்போது காவிரி நீர், மழைநீர் பற்றாக்குறை கடுமையாக நிலவுகிறது. இதனால், குறுவையை போல, ஏக்கருக்கு இரண்டு டன் நெல் விளைச்சல் சம்பா, தாளடியில் கிடைக்குமா? என, விவசாயிகளுக்கு

சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. சராசரியாக ஏக்கருக்கு, ஒன்றரை டன் வரை நெல்விளைச்சல் கிடைக்க வாய்ப்புள்ளது என, டெல்டா மாவட்ட விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் தற்போது, தண்ணீர் பற்றாக்குறை, வடகிழக்கு பருவமழை பொய்ப்பு ஆகிய துயரங்களையும் தாண்டி, போராடி விளைவித்த நெற்கதிர்களை, பேராவூரணி, ஒரத்தநாடு, தஞ்சாவூர், திருவையாறு பகுதி விவசாயிகள், தங்கள் வயல்களில் வாடகை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் பணிகளை தீவிரமாக மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து தஞ்சை விவசாயிகள் கூறியதாவது:தற்போது காவிரி நீர், மழை நீரின்றி சம்பா, தாளடி பயிர்கள் வறட்சியால் பாதித்து கருகின. இதனால், பயிர்களை காப்பாற்ற லாரிகளில் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி, இறைத்து, ஓரளவு நெல்லை காப்பாற்றினோம். தற்போது வயல்களில் நெல் அறுவடை துவங்கி விட்டோம். ஆனால் அறுவடை இயந்திரத்தின் வாடகை கழுத்தை நெருக்குகிறது.

வயலிலுள்ள ஈரப்பதம் பொறுத்து, அறுவடை இயந்திரத்துக்கு கட்டணம் பெறப்படும். இந்த இயந்திரமே கதிர்களை அறுத்து, நெல்மணிகளாக பிரித்து வெளியேற்றும். அறுவடை இயந்திரத்துக்கு, ஏக்கருக்கு, 1,800 ரூபாய் முதல், 2,000ம் ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கின்றனர். இதன்பின்னர், ஆட்களை வைத்து நெல் மூட்டைகளை நேரடி கொள்முதல் மையங்களுக்கு கொண்டு செல்ல, 500 ரூபாய் வரை மேலும் செலவாகும்.

இதுபோன்ற கூடுதல் செலவுகளாலும், சாகுபடி பரப்பளவு குறைவு, நெல் விளைச்சல் பல மடங்கு குறைவு ஆகிய காரணங்களால், கடந்த குறுவை பருவம் போல, நெல்மூட்டைக்கு, 900 ரூபாய் வரை, தற்போதும் விலை கிடைத்தாலும் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டமே ஏற்படும். லாபத்தை பார்க்க முடியாது. இதனால் கடும் அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளோம்.இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## நெல்கட்டும்செவலில் மர்ம நோய் 125 ஆடுகள் பலியானதால் பரபரப்பு

சிவகிரி : நெல்கட்டும் செவலில் மர்ம நோயால் 125 ஆடுகள் பரிதாபமாக பலியாயின.நெல்லை மாவட்டம் நெல்கட்டும்செவல் மற்றும் அதனை சுற்றியுள்ள அரியூர், பச்சேரி போன்ற பகுதிகளில் ஏராளமான வீடுகளில் விவசாயிகள் ஆடுகள் வளர்த்து வருகின்றனர். இப்பகுதியில் ஆடுகளுக்கு மர்ம நோய் தாக்கியுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று நெல்கட்டும்செவல் ராமையா தேவர் என்பவருக்கு சொந்தமான 7 ஆடுகள் இறந்தன. மேலும் கடந்த பொங்கல் தினம் முதல் தினந்தோறும் ராமையா தேவருக்கு சொந்தமான ஆடுகள் இறந்துள்ளன. இதுவரை மொத்தம் 50

ஆடுகள் இறந்துள்ளன.மேலும் அதே ஊரைச்சேர்ந்த கருத்தப்பாண்டியன் மகன்கள் மாரிச்சாமி என்பவரின் 25 ஆடுகளும், வெள்ளத்துரையின் 24 ஆடுகளும், சுப்பையா கோனார் மகன் சிவஞானத்தின் 10 ஆடுகளும், மாடசாமி மகன் முருகனின் 15 ஆடுகளும் ஆக மொத்தம் 125 செம்மறி ஆடுகள் இறந்துள்ளன.இப்பகுதியில் போதிய மழையில்லாததால் ஆடுகளுக்கு மர்ம நோய் தாக்கியதாக கூறப்படுகிறது. ஆடுகளை இழந்தவர்கள் இதுவரை அரசிடம் புகார் எதுவும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கால்நடைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு கால்நடைத்துறையினர் சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டுமென விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## அதிக பரப்பில் மிளகாய் சாகுபடிவரத்து உயர்வால் விலை சரிவு

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், மிளகாய் சாகுபடி பரப்பு அதிகமானதால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில், தாளவாடி, அந்தியூர், கோபி, மொடக்குறிச்சி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் அதிக பரப்பில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. தவிர, மஞ்சள், தென்னை, நிலக்கடலை சாகுபடியில், ஊடுபயிராக மிளகாய் சாகுபடி செய்கின்றனர்.

மசாலா பதப்படுத்தும் தொழில் மிக வேகமாக வளர்ந்து வரும் நிலையில், உள்நாட்டில் மிளகாயின் தேவை அதிகரித்துள்ளது. 2010 - 2011ல், 154 மெட்ரிக் டன்னாக இருந்த மிளகாய் உற்பத்தி, சென்றாண்டு, 158 மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் மிளகாய் நல்ல தரத்துடன் இருப்பதால், வெளிநாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஈரோடு வேளாண் விற்பனை குழு நிர்வாகிகள் கூறியதாவது:உள்நாட்டில் மிளகாய் உற்பத்தியில் தமிழ்நாடு, நான்கு சதவீதம் பங்களிக்கிறது. மசாலா பொருட்களில் மிளகாய் வற்றல் பயன்பாடு அதிகம் உள்ளதால், உள்ளூர் மற்றும் உலகநாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் சாகுபடி செய்யும் மிளகாயில், 70 சதவீதத்தை வற்றலாக விவசாயிகள் மாற்றுகின்றனர். தமிழகத்தில், சென்றாண்டு மிளகாய் சாகுபடி பரப்பு குறைந்து, தேவை அதிகரிப்பால் விலை உயர்ந்தது. மார்க்கெட்டில், கிலோ, 35 முதல், 40 ரூபாய்க்கு விற்ற பச்சைமிளகாய், தற்போது, 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கிலோ, 80 முதல், 90 ரூபாய்க்கு விற்ற மிளகாய் வற்றல், தற்போது, 75 ரூபாயானது. ஏப்ரல், மே மாதத்தில் மண்டிகளுக்கு வரத்து அதிகரிக்கும் பட்சத்தில், மேலும் விலை குறையும், என்றனர்.

## சிவப்பு செவ்வந்திவிற்பனை அதிகரிப்பு

ஈரோடு: சேலம் சுற்றுவட்டார பகுதியில் விளைந்த, சிவப்பு செவ்வந்திப்பூ, ஈரோட்டில் விற்பனை ஜோராக நடைபெறுகிறது.

ஈரோடு நகரில் சின்ன மார்க்கெட், பஸ் ஸ்டாண்ட் பழைய மேட்டூர் ரோடு, பி.எஸ்.பார்க் பகுதியில் மொத்த வியபாரம் செய்யும் பூக்கடைகள் அமைந்துள்ளன.ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம், அந்தியூர், சேலம், தர்மபுரி, திண்டுக்கல், நிலக்கோட்டையில் இருந்து, மல்லி, காக்காட்டன், முல்லை. கனகாம்பரம், கோழிக்கொண்டை, செண்டு மல்லி பூக்கள் விற்பனைக்கு வருகிறது. ஊட்டி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து ஊட்டி ரோஸ், பல வண்ண ரோஸ்கள், பட்டன்ரோஸ் ஆகியவை விற்பனைக்கு வருகின்றது.நாள் தோறும் நான்கு முதல் ஐந்து டன் பூக்கள் விற்பனைக்கு வந்து, மாவட்டம் முழுவதுமாக பயன்பாட்டுக்கு அனுப்பப்படுகிறது.மல்லி, கனகாம்பரம், காக்காட்டன் பூக்கள் போதிய மழையில்லாததால் விளைச்சல் பாதித்து, வரத்து குறைந்து போயின. பூஜை மற்றும் தரிசனத்திற்கு பயன்படுத்தப்படும் செவ்வந்தி பூக்கள் வரத்து வழக்கம் போல உள்ளன.மஞ்சள் செவ்வந்தியை தொடர்ந்து, சிவப்பு செவ்வந்திப்பூவும் விற்பனைக்கு வந்துள்ளது.

இதுபற்றி பூ மொத்த வியாபாரி குட்டி கூறுகையில்,சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து, ஈரோட்டிற்கு செவ்வந்திப்பூ விற்பனைக்கு அனுப்புகின்றனர். செப்டம்பர் துவங்கி, ஃபிப்ரவரி மாதம் வரையிலும், ஆறு மாதம் செவ்வந்திப்பூ உற்பத்தியாகிறது.மஞ்சள் செவ்வந்திப்பூவை தொடர்ந்து, சிவப்பு செவ்வந்திப்பூ விற்பனைக்கு வந்துள்ளது. மஞ்சள் செவ்வந்திப்பூ கிலோ, 60 ரூபாய்க்கும், சிவப்பு செவ்வந்திப்பூ கிலோ, 70 முதல், 90 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்கள் விரும்பி வாங்குவதால், அதிகப்படியாக விற்பனைக்கு வரவழைக்கிறோம், எனக்கூறினார்.

## மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம், வரும் 15ம் தேதி நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம், மாதம்தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடந்து வருகிறது.

வழக்கம்போல் இம்மாதக் கூட்டம், வரும் 15ம் தேதி மாலை, 3:00 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெற

உள்ளது.

கூட்டத்தில், விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களது கருத்துக்களையும், குறைகளையும் தெரிவிக்கலாம் என, மாவட்ட ஆட்சியர் சித்ர சேனன் தெரிவித்து உள்ளார்

## பருத்தி விதை வாங்கும் விவசாயிகளுக்கு எச்சரிக்கை

சேலம்: மாசிப்பட்டத்துக்கான பருத்தி விதைகளை வாங்கும் போது, விவசாயிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், என விதை ஆய்வு துணை இயக்குனர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்திரராஜன் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை:

இயல்பான மழை குறைந்ததால், போதிய நீர்வசதி இல்லாத நிலையில், மாசிப்பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள், தரமான விதைகளை முறையாக விதை விற்பனை உரிமம் பெற்று விற்பனை செய்பவர்களிடம் மட்டுமே வாங்கி பயன்படுத்தவும்.

மாசிப்பட்டத்துக்கு ஏற்ற சுரபி, எம்.சி.யூ.5 ஆகிய பருத்தி ரகங்களின் விதைகளை வாங்கும் போது, தரமான சான்று பெற்ற அல்லது சரியான விபர அட்டை உள்ள உண்மை நிலை விதைகளை மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும். விதை வாங்கும் போது, உரிய விற்பனை ரசீதை கேட்டுப்பெற வேண்டும். ஏஜன்டுகள் மூலம் விதைகளை வாங்க வேண்டாம்.

விதை விற்பனை உரிமம் பெறாமல், முறையற்ற விதத்தில் பருத்தி விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்யும் போலி வியாபாரிகள் மீதும், கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்கள் மீதும், விதைச்சட்டம் மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணை ஆகியவற்றின் கீழ் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## வாழைக்கு தண்ணீர் இல்லை; கண்ணீர் விடும் விவசாயிகள்

நரசிங்கபுரம்: ஆத்தூர், நரசிங்கபுரம் பகுதியில் பருவ மழையில்லாததாலும், கடுமையான வெயில் தாக்கத்தாலும், வாழைகள் காய்ந்து, கருகி வருகின்றன. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், நரசிங்கபுரம், அப்பமசமுத்திரம், வீரகனூர், நல்லூர், திட்டச்சேரி, ஆறகளூர், தலைவாசல், மணிவிழுந்தான், கீரிப்பட்டி, மல்லியக்கரை, தம்மம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், பூவன், ரஸ்தாலி, மொந்தன், பச்சை நாடா, செவ்வாழை, திசு வாழை என, பல்வேறு ரக வாழைகள் சாகுபடி செய்யப்படுகிறது.

ஆத்தூர் பகுதியில், வடகிழக்கு பருவ மழை பொய்த்துப் போனதால், வசிஷ்ட நதி, சுவேத நதி

உள்ளிட்ட நீர் நிலைகள் மட்டுமின்றி, விவசாய கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்து விட்டது. அதனால், வாழை, கரும்பு, காய்கறி செடிகள், பாக்கு, தென்னை உள்ளிட்ட பயிர்களுக்கு, தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை உள்ளது.தண்ணீர் இல்லாததோடு, கடுமையான வெயில் தாக்கத்தால், வாழைகள் காய்ந்து கருகி வருகிறது. வாழை இலை, வாழைத்தார் உற்பத்தி கடுமையாக பாதிக்கும் சூழல் உள்ளது. அதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.எனவே, வாழை, பாக்கு உள்ளிட்ட பயிர்களுக்கு நிவாரணம் அரசு வழங்க வேண்டும் என, ஆத்தூர் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கெண்டை மீன் வளர்ப்புஃபிப்., 21ல் பயிற்சி முகாம்

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 21ம் தேதி, கெண்டை மீன் வளர்ப்பு பற்றிய, ஒருநாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:

வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கும் பயிற்சியில், கெண்டை மீன் இனம், வளர்ப்புக்கு இடம் தேர்வு செய்தல், மீன் குளம் மற்றும் மீன் குஞ்சு இருப்பு செய்தல், தீவன மேலாண்மை போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

விவசாயிகள், பண்ணையாளர் உட்பட அனைத்து தரப்பினரும் பயிற்சி முகாமில் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் வரும், 20ம் தேதிக்குள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் அல்லது, 04286 266345, 266244, 266650 ஆகிய போன் எண்களில் தொடர்பு கொண்டு, பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னையில் கருந்தலை புழுக்கள் கட்டுப்படுத்தரூ.4 லட்சத்தில் செயல் விளக்க திடல் அமைப்பு

தர்மபுரி: ""தென்னையை தாக்கும் கருந்தலை புழுக்களை கட்டுப்படுத்த, நான்கு லட்ச ரூபாய் அரசு நிதி ஒதுக்கீடு செய்து செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டு வருகிறது," என, வேளாண் இணை இயக்குனர் மனோகரன் தெரிவித்தார்.

தர்மபுரி மாவட்டத்தில், தென்னையில் கருந்தலை புழுக்கள் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதனால், தென்னை மட்டை, தேங்காயில் உள்ள பச்சையம் உரியப்பட்டு, வறண்ட நிலை ஏற்பட்டு இருப்பதோடு, காய்கள் உற்பத்தி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.தென்னை

கருந்தலைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துதல் குறித்து, பாலக்கோடு தாலுகா, தொட்டபாவளி கிராமத்தில் விழிப்புணர்வு முகாம் நடந்தது. பாலக்கோடு உழவர் ஆலோசனை குழு தலைவர் சின்னராஜி, யூனியன் சேர்மன் கருணாகரன், மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாலக்கோடு வேளாண் உதவி இயக்குனர் சரோஜா வரவேற்றார்.

வேளாண் இணை இயக்குனர் மனோகரன், தலைமை வகித்து, கருந்தலை புழுக்களை கட்டுப்படுத்தல் குறித்து பேசுகையில், ""விவசாயிகள் தென்னை தோட்டங்களை நன்கு பராமரித்து, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டால், கருந்தலை புழுக்களில் இருந்து தென்னையை காப்பாற்ற முடியும், அட்மா திட்டத்தின் மூலம், நான்கு லட்ச ரூபாய் மதிப்பில் செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டு வருகிறது," என்றார்.ஆழியார் நகர், தென்னை ஆராய்ச்சி நிலை விஞ்ஞானி ராஜமாணிக்கம் பேசுகையில், ""கருந்தலைப்புழு தாக்குதவற்கான சூழ்நிலை, அப்பூச்சியின் வாழ்க்கை சுழற்சி, வாழ்க்கை பருவநிலைக்கேற்ற பயிர் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து' விளக்கினார்.

வயலாய்வின்படி இப்பூச்சி தாக்குதலோடு, இலைச்சுருள் நோய் கணப்படுவதால், அதற்கான பயிர்பாதுகாப்பு நடவடிக்கை குறித்தும் விளக்கினார். பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய தலைவர் தமிழ்செல்வன், உதவி பேராசிரியர் சண்முகம் ஆகியோர் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்னைகள், புதிய தொழில் நுட்பங்களுக்கு வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ள கேட்டு கொள்ளப்பட்டனர்.

துணை இயக்குனர் மேகநாதன் பேசுகையில், ""அட்மா திட்டத்தின் கீழ் செயல் விளக்க திடல்கள் அமைக்கப்பட்டு வருவதன் முக்கியத்துவம் குறித்தும், விவசாயிகள் ஒத்துழைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்தும், வேர் மூலம் மோனோகுரோடோபாஸ் மருந்து செலுத்துதல் மற்றும் ஓட்டுண்ணி விடுவதற்கான திட்டம் குறித்தும்' விளக்கினார்.

முதல் கட்டமாக, 25 செயல் விளக்க திடல்களுக்கு, 52 ஆயிரத்து, 500 ஓட்டுண்ணிகள் விவசாயிகளுக்கு வினியோகம் செய்து, ஓட்டுண்ணி விடும் முறை குறித்து விளக்கப்பட்டது.முகாமில், நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் புவனேஸ்வரி, அட்மா திட்ட பணியாளர்கள் சிவசங்கரி, கோபிநாத், சுரேஷ் மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் செய்திருந்தனர்.

## பிற மாவட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்: கருணாநிதி

சென்னை:"டெல்டா மாவட்டங்களைத் தவிர்த்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட மற்ற மாவட்டங்களின் விவசாயிகளுக்கு, நிவராணத் தொகையை அறிவிக்க வேண்டும்' என, தி.மு.க., தலைவர் கருணாநிதி

கூறியுள்ளார்.

அவரது அறிக்கை:

பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும், நிவராணத்தை அறிவிக்காமல், 50 சதவீதத்திற்கும் அதிகமாக மகசூல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும், திருப்தி அளிக்காத வகையில், நிவாரணத் தொகையை முதல்வர் ஜெயலலிதா அறிவித்து உள்ளார்.

வறட்சி ஏற்படும்; சாகுபடி பொய்த்துப் போகும் என்பதை, முன் கூட்டியே அறிந்து வைத்திருந்தாலும் கூட, அந்த வேளாண்மை துறை அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக, மற்ற மாவட்டங்களில் குறிப்பாக, மதுரை, சிவகங்கை, கன்னியாகுமரி, ராமநாதபுரம், விருதுநகர், கோவை, திருப்பூர் போன்ற மாவட்டங்களில், பயிர் காப்பீட்டுத் திட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதால், அதனால் ஏற்படும் இழப்பீடுக்கு யார் பொறுப்பேற்பது?

டெல்டா விவசாயிகளுக்கு ஏற்கனவே, 13,692 ரூபாய் ஏக்கர் ஒன்றுக்கு, நிவாரணமாக அளிக்கப்படும் என, அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ரூபாயில் கூட, பேரிடர் நிவாரணம் 5,000 ரூபாய்; தேசியப் பயிர்க் காப்பீட்டின் மூலமாக, 8,692 ரூபாய் சேர்த்துத் தான், 13,692 ரூபாய் இழப்பீடு வழங்கப்படுகிறது.

அமைச்சர்கள் டெல்டா மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து வந்த பின், இந்த, 13,692 ரூபாயோடு, மேலும், 1,308 ரூபாய் மட்டுமே கூடுதலாகச் சேர்த்து, ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் என, முதல்வர் மொத்தமாக அறிவித்திருக்கிறார்.

இந்த அசாதாரண நிலையிலிருந்து, தமிழக விவசாயிகளை மீட்டெடுக்கும் நோக்கில், டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு முன் தெரிவித்த நிவாரண அளவை அதிகரித்தும், மற்ற மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான நிவாரணத்தை, மேலும் தாமதிக்காமல் அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு கருணாநிதி அறிக்கையில் கூறிஉள்ளார்.

## தேயிலை சந்தை மதிப்பு ரூ.33 ஆயிரம் கோடியாக உயரும்



மும்பை: வரும் 2015ம் ஆண்டில், நாட்டின் தேயிலை சந்தை மதிப்பு, 33 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என, தனியார் ஆய்வு நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.தேயிலை அதிகம் உற்பத்தியாகும் முன்னணி நாடுகளுள் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. இந்தியாவில், 1,500க்கும் அதிகமான தேயிலை தோட்டங்கள் உள்ளன. இதன் வாயிலாக, 35 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பு பெற்று உள்ளனர். உள்நாட்டின், மொத்த தேயிலை உற்பத்தியில், "பிராண்டு' தேயிலையின் பங்களிப்பு, 55 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இந்தியாவில், "பிராண்டு' தேயிலை சந்தை, ஆண்டுதோறும், 20 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. தற்போது, உள்நாட்டில், "பிராண்டு' தேயிலை பயன்பாடு சிறப்பான அளவில் அதிகரித்து வருவதுடன், இதன் சந்தை மதிப்பு, 6,000 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த தேயிலை வர்த்தகம், தற்போதைய, 19,500 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்து, 33 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## வறட்சி விளைநிலங்களுக்கு சான்றளிப்பதில் அதிகாரிகள் அலட்சியம்: விவசாயிகள் ஏமாற்ற

திண்டுக்கல்:வறட்சியினால் கருகிப்போன விளைநிலங்கள் குறித்து சான்றளிப்பதில் அதிகாரிகள் காலதாமதப்படுத்துவதால் காப்பீடு பணம் பெற முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறையினரின் ஆலோசனைகளை பெற்று சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வந்தனர். சொட்டு நீர் பாசனம், பந்தல் சாகுபடி, தரமான விதைகளை மானிய விலையில் பெறுவது, இடு பொருட்கள் பெற்று அதன் மூலம் உழவு பணிகளை மேற்கொள்வது, தேவையான கால கட்டங்களில் போதுமான உரங்களை இடுவது போன்ற அனைத்து பணிகளையும்

அதிகாரிகளின் ஆலோசனைபடியே செய்து வருகின்றனர். களப்பணிகளின் மூலம் விவசாயிகளை ஒருங்கிணைத்து மண்மாதிரி பரிசோதனை செய்து எந்த விளைநிலங்களில் என்ன பயிர்களை சாகுபடி செய்யலாம் என்பது குறித்து தேவையான அறிவுரைகளை அளித்திருப்பதாக பெருமையடித்துக் கொள்ளும் வேளாண் துறையினர், வறட்சியினால் கருகிக்கிடக்கும் பயிர்கள் குறித்து இதுவரை களஆய்வு மேற்கொள்ளாதது விவசாயிகள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடம் மக்காச்சோளத்தை பயிரிடுமாறும், அதற்கு காப்பீடு செய்து கொள்ளுமாறும் வேளாண் துறையினர் அறிவுறுத்தியிருந்தனர்.

ஆலோசனை: மாவட்டத்தில் உள்ள 90 சதவீத விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் மக்காச்சோளத்தை பயிரிட்டிருந்தனர். மீதமுள்ள 10 சதவீத விவசாயிகள் பருத்தியை சாகுபடி செய்திருந்தனர். இந்த இரண்டுமே வறட்சியால் தரிசாகியுள்ளது. தட்டையாகிப்போன பயிர்களை அறுத்து மாடுகளுக்காவது தீவனமாக வழங்கலாம். ஆனால் அதற்கு முன்னதாக அந்த விளைநிலத்தை வேளாண் அலுவலரும், வருவாய்த்துறை சார்பில் வி.ஏ.ஓ.வும் இணைந்து ஆய்வு செய்து வறட்சியால் பயிர் கருகி விட்டதாக சான்றளிக்க வேண்டும்.

சான்றிதழ் பெறுவதற்கு முன்னதாக தட்டையாகிப்போன பயிரை தீவனத்திற்காக அறுத்தால், குறிப்பிட்ட விவசாயி தனது நிலத்தில் எந்த பயிரையும் சாகுபடி செய்யவில்லை என்று குறிப்பெழுதிவிடுவர்.

அதிகாரிகளின் காலதாமதம் காரணமாக மாவட்ட விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். அதே நேரம் தட்டை பயிரும் கருகிக்கொண்டிருப்பதால் மாட்டு தீவனத்திற்கு கூட பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதை எண்ணி வேதனையடைந்துள்ளனர். வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""ஒட்டுமொத்தமாக மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு குறித்து அரசுக்கு அறிக்கை அளிப்பதற்கான முயற்சியில் துறை அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அரசு நிவாரண தொகை அறிவிப்பு வெளியான பின்பே, சான்றளிப்பது தொடர்பான பணிகளில் கவனம் செலுத்த முடியும்" என்றார்.



**கொத்தவரை சாகுபடி:**

இந்தியாவில் கொத்தவரை சாகுபடி பல ஆண்டுகளாக மிகவும் பிரபலமாக விளங்கிவருகிறது. குவார் எனப்படும் இந்த கொத்தவரை காய்கறி வகையைச் சேர்ந்தது அல்ல. மாறாக இந்த கொத்தவரையில் இருந்து கிடைக்கும் ஒரு வகைப் பொருள் எரிவாயு எடுக்க மற்றும் உணவுக்கும் பயன்படுத்தப் படுகிறது. ராஜஸ்தானில் கொத்தவரைக்கு என சந்தை உள்ளது. கொத்தவரை சாகுபடியில் பல விவசாயிகள் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றனர். தமிழகத்தில் கொத்தவரை சாகுபடி தற்போது சேலம், கடலூர், திருவண்ணாமலை, ஈரோடு, விருதுநகர், திருச்சி, நாமக்கல், வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பிரபலமடைந்து வருகிறது.

**சாகுபடி நுட்பங்கள்:** நடவிற்கு ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்கள் ஏற்றதாகும். அனைத்து மண்வகைகளிலும் சிறப்பாக வளரக்கூடியது. குறிப்பாக செம்மண்ணில் நன்கு வளரும். நிலத்தை இரண்டு முறை நன்கு உழுது, அடியுரமாக தொழு உரம் 5 டன் வரையும், டிஏபி 50 கிலோவும் இடவேண்டும். நடுவதற்கு ஒரு ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது. நடவில் 1 ½ அடி x 1 அடி இடைவெளி விட்டு விதைகளை ஊன்ற வேண்டும். மாதம் இரண்டு முறை களை எடுப்பது அவசியம். 13 நாட்களுக்கு ஒரு முறை வாடவிட்டு, வாடவிட்டு நீர் பாய்ச்ச வேண்டும். எல்லா காய்களையும் அறுத்து களத்தில் போட்டு மிஷின் மூலம் அடிக்க வேண்டும். நல்ல பராமரிப்பு இருந்தால் ஏக்கருக்கு 500 முதல் 1000 கிலோ வரை விதை மகசூல் கிடைக்கும். எந்த சூழ்நிலையிலும் காய்கள் வெடித்து நிலத்தில் கொட்டாது. 55 முதல் 60ம் நாள் செடியில் கொழுந்தை கிள்ளுவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம். நிலத்தில் கொத்தவரை பயிரிடுவதால் நிலத்தில் உள்ள மணிச்சத்து, தழைச்சத்து ஆகியவை அதிகரித்து நிலம் வளம்பெறுகிறது. (**தகவல்**: அகரன் பிரம், எண்.52, காமதேனு டவர்ஸ், அசோகபுரம், பவானி மெயின்ரோடு, ஈரோடு-638 004. 98435 55530, 0424-222 3992)

**பல பயிர் சாகுபடி:**

சாத்தான்குளத்திலிருந்து உடன்குடி செல்லும் சாலையில் 7வது கிலோ மீட்டரில் நரையன் குடியிருப்பு அருகிலுள்ள கருவேலம்பாடு கிராமத்தில் விவசாயி ஜெயபாலன் பண்ணையில் பலபயிர் சாகுபடி சிறப்பாக நடைபெறுகிறது. பத்து ஏக்கரில் 1000 செடி முருங்கை, 450 தென்னை, 300 வாழை, 6 மாமரம், 10 நெல்லி, 5 எலுமிச்சை, 7 கொய்யா, 50 சப்போட்டா நிற்குது.

தென்னையில் ஊடுபயிராக நிலக்கடலை சாகுபடி, சென்ற வருடம் செடி முருங்கையில் 60 டன் வரை மகசூல். வேலையாட்கள் கூலி, முருங்கை பராமரிப்பு செலவுகள் யாவும் தென்னை, வாழையிலிருந்து கிடைக்கிற வருமானத்திலேயே ஈடுகட்டலாம். செடிமுருங்கையில் கிடைக்கிற வருமானம் முற்றிலும் லாபம்தான். வருடத்திற்கு 3 லட்சம் ரூபாய்க்கும் குறையாமல் லாபம் கிடைக்கிறது.

விவசாயி கடைபிடிக்கும் செடிமுருங்கை சாகுபடி இதுதான். டிசம்பர், ஜனவரி மாதங்கள் செடி முருங்கை சாகுபடிக்கு ஏற்றவை. 4 அடி நீளமுள்ள விதைக்குச்சியை அரை அடி வரை மண்ணில் புதையுமாறு பதியம் போட்டு, 8 நாட்களுக்கு பிறகு நன்றாக தழைத்துவரும் விதைக்குச்சியை மட்டும் தேர்ந்தெடுத்து நடவு செய்ய வேண்டும். 2 கன அடிஅளவுக்கு குழி பறித்து, ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கை இட்டு விதைக் குச்சிகளை குழியின் நடுப்பகுதியில் வைத்து மண்ணால் மூடவேண்டும். 3 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. சொட்டு நீர் பாசனம் அமைத்தால் அதிக மகசூல் கிடைக்கும். ஒரு முறை நடவு செய்தால் 5 வருடங்கள் வரை பலன் கிடைக்கும். மரங்களின் வேர்ப் பகுதியில் பூச்சி புழுக்கள் தாக்குதல் இருந்தால் அந்த மரங்களை அப்புறப்படுத்திவிட வேண்டும்.

நடவு செய்த 2வது மாதத்தில் ஒவ்வொரு மரத்திற்கும் இரண்டு பக்கங்களிலும் முக்கால் அடி ஆழத்திற்கு குழி பறித்து 5 கிலோ அளவில் கோழி எரு இடவேண்டும். 4வது மாதத்தில் இதே போல் குழிபறித்து செடிக்கு 5 கிலோ மாட்டுச் சாணம், அரைகிலோ வேப்பம் புண்ணாக்கு கலவையை இடவேண்டும். பூச்சியைக் கட்டுப்படுத்த சுழற்சி முறையில் 15 நாட்களுக்கு ஒரு முறை பூண்டு கரைசல், வசம்புத் தைலம் தெளிக்க வேண்டும். நான்காவது மாத இறுதியில் பூக்கள் பூக்க ஆரம்பிக்கும். பூ பூத்தவுடன் உதிர்ந்துவிடும். அடுத்த பூ நன்றாக பிடிப்பதற்கு அரை கிலோ பெருங்காயம், சிறிது காதிசோப், 5லிட்டர் தண்ணீரில் நன்கு கரைத்து வடிகட்டி கரைசலை மரத்தின் வேர்ப்பகுதியில் தெளிக்க வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் 20 மிலி பெருங்காயக் கரைசல் வீதம் கலந்தால் 2 மாதங்களுக்கு அடிக்க முடியும். இதைக் கணக்கிட்டு தேவைக்கு ஏற்ப தயாரித்துக் கொள்ள வேண்டும். ஐந்தாவது மாதத்தில் மரங்கள் காய்ப்புக்கு வரும். மாதம் இரண்டு அறுவடை வீதம் அடுத்து 6 மாதங்களுக்கு தொடர்ந்து அறுவடை செய்யலாம். 1000 செடி முருங்கை இருந்தால் ஒரு பறிப்புக்கு 5 டன் வரை முருங்கை காய்கள் கிடைக்கும். மேலும்

## ஒட்டுரக தென்னை; ஓராண்டில் ரூ.2 லட்சம் - டீஜே வீரிய கன்றுகளால் பலன்



ஒட்டுரக தென்னை; ஓராண்டில் ரூ.2 லட்சம் - டீஜே வீரிய கன்றுகளால் பலன்

தென்னை சாகுபடியில், "டீஜே வீரிய ஒட்டுரக'க் கன்றுகள் மூலம், ஒரு ஏக்கரில் ஓராண்டில் ரூ.2 லட்சம் வருவாய் ஈட்டலாம்.
தென்னை சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் மூலம் மேற்கண்ட பலனை பெறமுடியும். நம் விவசாயிகள் சாதாரண தென்னை சாகுபடியில், முறையற்ற பராமரிப்பு மேற்கொள்வதால் உண்மையான பலனை பெற இயலவில்லை. ஒரு தென்னை 100 முதல் 125 காய்கள் தருகிறது. மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப உற்பத்தி போதாத நிலையில், அறிவியல் இங்கு கைகொடுக்கிறது.

**டீஜே கன்சல்டன்சி:**
இதற்கு உதவுவது ஒட்டுரக வீரிய தென்னை சாகுபடி. இதன் மூலம் அதிக தேங்காய் உற்பத்தியில், அதாவது ஆண்டுக்கு ஒருமரம் 200 முதல் 250 தேங்காய் வரை உற்பத்தி செய்யும், நிகரற்ற சேவையில் ஈடுபட்டுள்ளது, டீஜே கன்சல்டன்சி சர்வீசஸ் என்ற நிறுவனம். இந்த நிறுவனம் சம்பூர்ணா, புஷ்கலா மற்றும் விஷ்வாஸ் என்ற ரகங்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. விற்பதோடு நில்லாமல், தென்னை சாகுபடி குறித்த தேவையான ஆலோசனைகள், குறிப்பிட்ட காலங்களில் பராமரிப்பில் உதவியை தொடர்ந்து செய்து வருகிறது.

**நவீனரக கன்றுகள்:**
இந்நிறுவனம் ஒட்டுரக கன்றுகளை தயார் செய்வதே அலாதியானது. இதற்கென நாற்றங்காலை தயார் செய்து 6 மாத கன்றுகளை விற்பனை செய்கிறது. வீரியமான தாய்க்கன்றில், வீரியமுள்ள ஆண் தென்னையின் மகரந்தத்தை, நவீன தொழில்நுட்பத்துடன் சேர்த்து கன்றுகளை உருவாக்குகிறது. ஆறுமாதத்திற்கு பின், வீரியமுள்ள அதிக பச்சையான கன்றுகளை விற்பனை செய்கின்றனர்.

**லாபம் எப்படி:**

ஒரு வீரிய ஒட்டுரக கன்றின் விலை ரூ.350. இது அதிகமோ என்போருக்கு, வியக்கும்படி பதிலளிக்கின்றனர். சம்பூர்ணா ரக கன்றை 25 முதல் 27 அடி இடைவெளி யில், ஒரு ஏக்கரில் 70 கன்றுகள் நடலாம். முறையாக பராமரித்தால், இக்கன்றுகள் 22 மாதங்களில் பூக்கத் துவங்குகிறது. 3வது ஆண்டில் 3 அடி உயரத்தில் அறுவடைக்கு தயாராகிறது. (சாதாரண ரகக்கன்றுகள் 6வது ஆண்டில்தான் பூக்கத் துவங்கும். ஏழாவது ஆண்டில் காய்ப்புக்கு வரும்). ஒட்டுரக மரங்கள் குட்டையாக இருப்பதால், மருந்து தெளிப்பது, பராமரிப்பது எளிது.

ஒரு வீரியரக மரத்தில் ஓராண்டில் 18 பாளைகள் (சாதாரண ரகத்தில் 12) வெளிவரும். 300 இளநீர் காய்களும், முற்றிய தேங்காய் எனில், 250 பெரிய காய்களும் கிடைக்கும். இளநீர் காயில் 500 மி.லி., நீர் (சாதாரண ரகத்தில் 250 மி.லி.,), முற்றிய காயில் 200 கிராம் (சாதாரண ரகத்தில் 125 கிராம்) தேங்காய் இருக்கும்.

ஒரு மரம் ஆண்டுக்கு ரூ. 3 ஆயிரம் வரை பலன்தரும். எனவே 70 மரங்கள் உள்ள ஒரு ஏக்கரில் ரூ. 2.10 லட்சம் வரை பெறலாம். மரக்கன்று நட, சொட்டு நீர்ப்பாசனங்களுக்கு என, அரசு மானியம் உள்ளது.

பத்தாண்டுகளில் ஒட்டுரக மரம் 11 அடிவரை வளர்கிறது. ஏணி வைத்து காய்பறிக்கலாம். இதனால் தொழிலாளர்கள் பிரச்னையும் இங்கு இல்லை. இதனால் கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதி விவசாயிகள், இவ்வகை மரக்கன்றுகளுக்கு மாறிவிட்டனர்.

மதுரை கொடிமங்கலம் நாகதீர்த்தம் பகுதியில், இதற்கான நாற்றுப் பண்ணை 200 ஏக்கரில் பரந்து விரிந்துள்ளது.

டீஜே கன்சல்டன்சி நிறுவன முதன்மை செயல் அலுவலர் எம்.முரளி, சீனியர் எக்ஸிகியூட்டிவ் என்.ஆறுமுகம் கூறியதாவது: சிறிய விவசாயிகளை மேம்படுத்தும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறோம். இவ்வகையில் 10 லட்சம் விவசாயிகள் என இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

டீஜே சம்பூர்ணா, புஷ்கலா, விஷ்வாஸ் என 3 ரகங்கள் உள்ளன. சம்பூர்ணாவைப் போலவே, புஷ்கலா கன்றை இளநீருக்காகவே சாகுபடி செய்யலாம். நடவு செய்த 26 மாதத்தில் பூக்கும். 7மாத வயதுள்ள இளநீர்க் காய்களில் 600 மி.லி., சுவையான நீர் கிடைக்கும்.

இதேபோல விஷ்வாஸ் ரகக்கன்றுகள் அதிகளவு கொப்பரை, எண்ணெய் தரக்கூடியது. குறைவான பராமரிப்புச் சூழலிலும் அதிக காய்ப்புத்திறன் கொடுக்கக் கூடியது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

மேலும் தகவல்களுக்கு 94430 15536

**டீஜே சம்பூர்ணா**

* நடவு செய்த 24 மாதங்களில் முதல் பாளை வந்து, குறுகிய காலத்தில் பயன்தரக் கூடியது.
* இளநீராக அறுவடை செய்யும்போது, அதன் உற்பத்தி திறன் 30 சதவீதம் அதிகரித்து,

அதிகபட்சமாக 400 காய்கள் வரை அறுவடை செய்துள்ளனர்.

* ஒரு எக்டேரில் (2.5 ஏக்கர்) தோராயமாக ஒருஆண்டில் 8750 கிலோ கொப்பரை கிடைக்கிறது.

* ஒரு எக்டேரில் தோராயமாக 5 டன் தேங்காய் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

**டீஜே புஷ்கலா**

* இளநீருக்கென்றே சிறந்த வீரிய ஒட்டுரகம்.

* நடவு செய்த 26 மாதங்களில் பூக்கும் தன்மையுடையவை.

**டீஜே விஷ்வாஸ்**

* அனைத்து பயன்பாட்டுக்கும் ஏற்ற வீரிய ஒட்டுரகம்.

* குறுகிய காலத்தில் பூத்துக் காய்க்கக் கூடியது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

13.02.2013 A.M

## கரும்பு உற்பத்தியை அதிகரிக்க நிபுணர்கள் குழு அமைக்க முடிவு



புதுடெல்லி : கரும்பு உற்பத்தியை அதிகரிக்க உணவு, விவசாயத் துறை அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய குழுவை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து, சர்க்கரைத் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: நாட்டில் சத்தான கரும்பு விளைச்சல் குறைந்து கொண்டே வருகிறது. கடந்த 2000,01ம் ஆண்டில் கரும்பு பிழிதிறன் சராசரியாக 10.48 சதவீதமாக இருந்தது. இது 2011,12ம் ஆண்டில் 10.17 சதவீதமாக குறைந்தது.

இதனால், கரும்பு விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தி வருகிறது. பிழிதிறனை 11 சதவீத அளவுக்கு அதிகமாக உயர்த்தினால்தான், விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும். எனவே, கரும்பு விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்தவும், உற்பத்தியை அதிகரிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இதற்காக மத்திய உணவு அமைச்சகம் மற்றும் வேளாண்மை அமைச்சக அதிகாரிகளுடன் கரும்பு பயிர் ஆராய்ச்சி நிபுணர்கள் அடங்கிய குழுவை மத்திய அரசு அமைக்கவுள்ளது.


இக்குழு வரும் ஏப்ரல் மாதம் தனது பரிந்துரைகளை அளிக்கும். அதனடிப்படையில், மத்திய அரசு குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தற்போது மகாராஷ்டிராவில் உற்பத்தியாகும் கரும்புதான் அதிகபட்சமாக 11.32 சதவீத பிழிதிறன்

கொண்டிருக்கிறது. கர்நாடகா கரும்பு 10.93 சதவீதமும், ஆந்திரா கரும்பு 9.77 சதவீதமும், தமிழ்நாடு 9.11 சதவீதமும் பிழிதிறன் கொண்டிருக்கிறது.

மற்ற மாநிலங்களில் உற்பத்தியாகும் கரும்பு மிகவும் குறைந்த பிழிதிறனே கொண்டிருக்கிறது. அதே போல், தமிழகத்தில்தான் மிக அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு 100.2 டன் கரும்பு உற்பத்தியாகிறது. உ.பி.யில் குறைந்த அளவாக 59 டன்னே உற்பத்தியாகிறது. இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

**காவிரியில் தமிழகத்துக்கு கர்நாடகா திறந்த தண்ணீர் எங்கே?**



பென்னாகரம் : கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து காவிரி ஆற்றில் திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று இரவு வரை தமிழகத்துக்கு வந்து சேரவில்லை.
காவிரி டெல்டா பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிரை காப்பாற்ற 12 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிடக் கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு கோரியது. இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை அளிக்க நிபுணர் குழு அமைக்கப்பட்டது. இந்த குழு தமிழகத்தில் ஆய்வு செய்து அறிக்கை அளித்த பிறகு, கடந்த வியாழக்கிழமை உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழகத்துக்கு 2.44 டி.எம்.சி. தண்ணீரை கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து உடனடியாக திறந்துவிடும்படி கர்நாடக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதன்படி கடந்த 9ம் தேதி காலை 11 மணியளவில் கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. 48 மணி நேரத்தில் 160 கி.மீ தூரத்தில் உள்ள மாநில எல்லையான பிலிகுண்டுலுவுக்கு வந்தடைந்திருக்க வேண்டும். ஆனால், நேற்று (12ம்

தேதி) இரவு 8 மணி வரை தண்ணீர் வரவில்லை. தொடர்ந்து கண்காணித்து வருவதாக பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர் ஆணைய பணியாளர்கள் தெரிவித்தனர்.

குறைவான அளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டதே இன்னும் வராததற்கு காரணம் என்று விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். விநாடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தற்போது காவிரி ஆறு வறண்டு கிடப்பதால் நிலப்பகுதி உறிஞ்சியது போக எஞ்சிய நீரே ஆற்றில் வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

‘‘வழக்கமாக 48 மணி நேரத்தில் தமிழகத்துக்கு தண்ணீர் வரும். ஆனால் 9ம் தேதி திறந்த தண்ணீர் நேற்று மாலை வரை தமிழகத்துக்கு வராததால் கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்பது போல் நடிக்கிறது. குறைந்த அளவு தண்ணீரை திறந்துவிட்டு, அதையும் கர்நாடக மாநில ஆற்று பகுதி நிலத்தடி நீர் மட்டத்துக்கு பயன்படும் விதமாக செயல்படுகிறது‘‘ என்று தமிழக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

நீர் மட்டம் 29.49 அடி: தற்போது மேட்டூர் அணைக்கு குறைவான அளவு தண்ணீரே வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை அணைக்கு விநாடிக்கு 127 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் நீர்மட்டம் 29.49 அடியாக உள்ளது. நீர் இருப்பு 7.32 டி.எம்.சி.

இன்றைய வேளாண் செய்திகள்

13.02.2013 A.M

## கர்நாடகாவில் திறக்கப்பட்ட காவிரிநீர் இன்னும் பிலிகுண்டுலுவுக்கு வரவில்லை இன்று வருமா? என அதிகாரிகள் எதிர்பார்ப்பு

மேட்டூர்

கர்நாடகாவில் திறக்கப்பட்ட காவிரிநீர் இன்னும் பிலிகுண்டுலுவுக்கு வந்து சேரவில்லை. எனவே, அந்த தண்ணீர் இன்று வருமா? என்று அதிகாரிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

தண்ணீர் வரவில்லை

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுபடி கர்நாடக மாநிலம் கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து கடந்த 9–ந் தேதி வினாடிக்கு 1,250 கனஅடி வீதம் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் 4–ம் நாளான நேற்று தமிழக–கர்நாடக எல்லையில் உள்ள பிலிகுண்டுலுவை வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இரவு வரை தண்ணீர் வந்து சேரவில்லை.மழையின்மை காரணமாக போதுமான நீர்வரத்து இன்றி காவிரி ஆற்றுப்படுகை வறண்ட நிலையில் காணப்படுகிறது. இதனால் கர்நாடகம் மற்றும் தமிழகத்திற்கு இடைபட்ட காவிரி ஆற்றின் வழிப்பாதையை இந்த தண்ணீர் கடந்து வருவதில் கணிக்க முடியாத காலதாமதம் ஏற்பட்டு வருகிறது.

இன்று வருமா?

எனவே, இந்த தண்ணீர் இன்று (புதன்கிழமை) வந்து சேரும் என்ற எதிர்பார்ப்புடன் தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள் பிலிகுண்டுலுவில் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.மேலும், கர்நாடக அணையில் திறந்து விடப்பட்ட தண்ணீர் வறட்சி காரணமாக முழுமையாக மேட்டூர் அணைக்கு வந்து சேருமா? என்ற கேள்விக்குறியும் எழுந்து உள்ளது. தண்ணீர் விரைவாக மேட்டூர் அணையை வந்தடையாவிட்டால், இந்த அணையின் மூலம் குடிநீர் வசதி பெறும் மாவட்டங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன.

<u>நீர்மட்டம் 29 அடி</u>

இதுமட்டுமின்றி மேட்டூர் அணையில் வாழும் மீன் இனங்களுக்கு போதுமான தண்ணீரின்றி ஆபத்தான சூழ்நிலை ஏற்படும். மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று மாலை நிலவரப்படி 29.48 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 128 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

## பயிர் காப்பீடு திட்டத்தில் 17,170 விவசாயிகள் சேர்ந்து உள்ளனர்

தூத்துக்குடி,

தூத்துக்குடி மாவட்டத்தில் 17 ஆயிரத்து 170 விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து உள்ளனர்.

வறட்சி

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட நடப்பு ஆண்டில் குறைவான மழையே பெய்து உள்ளது. இதனால் மாவட்டம் முழுவதும் வறட்சி தாண்டவமாடிக் கொண்டு இருக்கிறது. மாவட்டத்தில் உள்ள 596 மானாவாரி குளங்களும் நிரம்பாமல் வறண்டு கிடக்கிறது.

53 தாமிரபரணி பாசன குளங்களும் தண்ணீர் இன்றி கிடக்கிறது. இதனால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டு உள்ளது.

நிவாரணம்

இந்த பாதிக்கப்பட்ட பகுதிகளை விரைவில் உயர்மட்டக்குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்ய உள்ளனர். அதன் அடிப்படையில் நிவாரண உதவிகள் வழங்கப்பட உள்ளன. அதே நேரத்தில் பயிர் காப்பீடு திட்டத்தில் இன்சூரன்சு செய்தவர்களுக்கு இன்சூரன்சு தொகை வழங்கப்படவும் வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் மிளகாய், வாழைப் பயிர்களுக்கு 400 விவசாயிகள் ரூ.19 லட்சத்து 60 ஆயிரம் இன்சூரன்சு செலுத்தி உள்ளனர். பயறு வகைப் பயிர்களுக்கு சுமார் 16 ஆயிரத்து 770 விவசாயிகள், ரூ.27 லட்சம் இன்சூரன்சு தொகை செலுத்தி உள்ளனர். தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான பணிகள் நடந்து வருகின்றன என்று வேளாண் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கோபி பகுதியில் வறட்சியிலும் அமோக விளைச்சல் தரும் ஒட்டுரக கத்தரிக்காய் அதிகம் லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி

கோபிசெட்டிபாளையம்,

கோபி பகுதிகளில் வறட்சியிலும் ஒட்டுரக கத்திரிக்காய் அமோக விளைச்சல் தருகிறது. அதிகம் லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

கத்தரி சாகுபடி

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக பயிர்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. இதனால், விவசாயிகள் பெரும்பாலும் குறுகிய கால பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்கின்றனர். தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்களை விவசாயிகள் விரும்பி சாகுபடி செய்கின்றனர்.

கோபிசெட்டிபாளையம் தாலுகாவுக்கு உள்பட்ட பொலவக்காளிபாளையம், கடுக்காம்பாளையம், கோரக்காட்டூர், வெள்ளாங்கோவில், குருமந்தூர், கள்ளிப்பட்டி, புஞ்சைத்துறையம்பாளையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் கத்தரிக்காய் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன.

ஒட்டு ரகம்

டிசம்பர் மாதம் முதல் மே மாதம் வரை கத்தரிக்காய் சாகுபடி செய்ய ஏற்ற காலம் என்பதாலும், குறுகிய காலத்தில் காய் பிடித்து அறுவடை செய்யப்படுவதால் கோபிசெட்டிபாளையம் பகுதியில் விவசாயிகள் ஆர்வமாக சாகுபடி செய்து உள்ளனர். கோ–1, கோ–2, பாலூர், கண்ணாடி கத்தரி ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன.

6 மாத பயிரான கத்தரிக்காய், நடவு செய்யப்பட்ட 25 நாட்களில் பூ பூக்கத் தொடங்குகிறது. அதன்பிறகு, 15 நாட்களில் காய்பிடித்து அறுவடை செய்யப்படுகிறது. தொடர்ந்து 3 மாதம் வரை கத்தரிக்காய் பலன் கொடுக்கிறது. கோபி பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் ஒட்டுரக கத்தரிக்காய் கேரளா மாநிலத்திற்கு அதிக அளவில் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

20 டன் மகசூல்

இதுபற்றி புஞ்சைத்துறையம்பாளையத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், ‘‘ஒட்டுரக கத்தரி என்பது சாதாரண கத்தரிக்காயை விட மிகவும் நீளமாக காணப்படும். கேரளாவை

சேர்ந்தவர்கள் இந்த கத்தரிக்காயை அதிக அளவில் விரும்பி வாங்குகின்றனர். இந்த ரக கத்தரிக்காய்களை நோய்கள் அதிகம் தாக்குவதில்லை. செவ்வாய், புதன்கிழமை ஆகிய 2 நாட்களில் அறுவடை செய்யப்பட்டு கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஒரு கிலோ கத்தரிக்காய் 6 ரூபாய் முதல் 7 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. சராசரியாக ஏக்கருக்கு 10 டன் மகசூல் முதல் 20 டன் வரை கிடைக்கிறது. விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது'' என்றார்.

## நடப்பு நிதி ஆண்டில் உணவு தானிய ஏற்றுமதி 4,000 கோடி டாலராகும்

புதுடெல்லி,

நடப்பு நிதி ஆண்டில், உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. எனவே, இதுவரை 2,500 கோடி டாலர் மதிப்பிற்கு உணவு தானியங்கள் ஏற்றுமதியாகி உள்ளது. இந்த நிதி ஆண்டிற்குள் ஏற்றுமதி 4,000 கோடி டாலரை எட்டும் என மத்திய விவசாய துறை ராஜாங்க மந்திரி தாரிக் அன்வர் தெரிவித்துள்ளார். 2012–13–ஆம் பருவத்தில் மொத்தம் 25 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், ஏற்கனவே உணவு தானிய உற்பத்தி 24 கோடி டன்னை எட்டியுள்ளது.

## காய்கறி, சமையல் எண்ணெய் விலை உயர்வால், ஜனவரி மாதத்தில் சில்லறை விலை பணவீக்கம் 10.79 சதவீதமாக உயர்வு

புதுடெல்லி,

காய்கறி, சமையல் எண்ணெய் போன்ற உணவு பொருள்கள் விலை உயர்வால், நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் சில்லறை விலை பணவீக்கம் ஜனவரி மாதத்தில் 10.79 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கடந்த 2012 டிசம்பரில் இந்த பணவீக்கம் 10.56 சதவீதமாகவும், நவம்பரில் 9.90 சதவீதமாகவும், அக்டோபரில் 9.75 சதவீதமாகவும் இருந்தது. ஆக தொடர்ந்து நான்கு மாதங்களாக இந்த பணவீக்கம் அதிகரித்து வருகிறது.

**பிரிக்ஸ் நாடுகள்**

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய பிரிக்ஸ் நாடுகளில் இந்தியாவில்தான் சில்லறை விலை பணவீக்கம் மிகவும் அதிகமாக உள்ளது. 2012 டிசம்பரில் தொழில்துறை உற்பத்தி 0.6 சதவீதம் சரிவடைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும்

தொழில்துறை மந்தமாக உள்ள நிலையில் சில்லறை விலை பணவீக்கம் உயர்ந்துள்ளது. இது பாரத ரிசர்வ் வங்கிக்கு ஒரு சவாலாக இருக்கும் என பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் காய்கறி விலை 26.11 சதவீதமும், சமையல் எண்ணெய் விலை 14.98 சதவீதமும் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள் விலை 13.73 சதவீதம் அதிகரித்துள்ளது.

தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் விலை முறையே 14.90 சதவீதம் மற்றும் 12.76 சதவீதம் அதிகரித்துள்ளது. சர்க்கரை விலை 12.95 சதவீதமும், ஆடைகள் மற்றும் காலணி விலை 11 சதவீதமும் உயர்ந்துள்ளது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கத்துடன் ஒப்பிடும்போது நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் மிகவும் துல்லியமானது என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

2012 ஜனவரியிலிருந்து நுகர்வோர் விலை பணவீக்கம் குறித்த புள்ளி விவரம் மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. இப்பணவீக்கம் நாடு, கிராமம், நகரம் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வெளியிடப்படுகிறது. ஜனவரியில் நாடு தழுவிய அளவில் இந்த பணவீக்கம் 10.79 சதவீதமாக உள்ளது. நகரங்களில் 10.42 சதவீதத்திலிருந்து 10.73 சதவீதமாகவும், கிராமங்களில் 10.74 சதவீதத்திலிருந்து 10.88 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.

**<u>மொத்த விலை பணவீக்கம்</u>**

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 7.18 சதவீதமாக குறைந்தது. இருப்பினும் இந்த பணவீக்கம் அதிகமானது என பாரத ரிசர்வ் வங்கியின் கவர்னர் டீ. சுப்பாராவ் தெரிவித்துள்ளார். நடப்பு நிதி ஆண்டில் மார்ச் மாதத்திற்குள் மொத்தவிலை பணவீக்கம் 6.8 சதவீதமாக குறையும் என ரிசர்வ் வங்கி முன்னறிவிப்பு செய்து இருந்தது.

ஜனவரி மாத மொத்த விலை பணவீக்கம் குறித்த புள்ளிவிவரத்தை மத்திய அரசு நாளை (வியாழக்கிழமை) வெளியிடுகிறது.